[13th November 1961

THE HON. SRI P. KAKKAN: அநேகமாக 20, 21 வயதிற்கு மேல், 60 வயது வரைகூட, படிக்கவேண்டுமானால், படிக்கலாம்.

SRI P. G. MANICKAM: எந்தெந்த இடங்களில் ஹரிஜன நல பள்ளிக்கூடங்கள் சர்க்காரால் ஆரம்பிக்கப்பட்டன, அவற்றிற்கு எவ்வளவு மனுக்கள் அனுப்பப்பட்டன?

THE HON. SRI P. KAKKAN: கேள்வி நடைமுறையிலே உள்ள பள்ளிக்கூடங்களைப் பற்றியது. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லுகிறேன்.

SRI T. IRUSAPPAN: ஸார், ஹரிஜன ஸ்கூல்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும், மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பள உயர்வு போன்று கொடுக்கப்பட்டிருக்கிறதா?

DEPUTY SPEAKER: The hon. Member may put a separate question.

SRI A. GOVINDASAMI: முதியோர் பள்ளிக்கூடங்கள் இரவு நேரத்தில் நடத்துவதற்கு, விளக்கு வசதியும், ஆசிரியர்களுக்குப் போதுமான ஊதியமும் இல்லாததன் காரணத்தினால், பல பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? அவைகளுக்கு வேண்டிய வசதிகள் சீக்கிரமாகவே செய்யப்படுமா?

THE HON. SRI P. KAKKAN: என்னிடம் உள்ள லிஸ்டில் பார்த்தால், தென்னார்காட்டில் அப்படிப்பட்ட பள்ளிக் கூடங்களே இல்லை. ஆகவே, அந்தக் குறைகள் அங்கு இருக்க முடியாது என்று தெரிகிறது.

SRI K. PONNIAN: ஸார், ஜாதி ஒழியவேண்டும் என்று பாடுபடும் நம் சர்க்கார், ஹரிஜனப் பள்ளிகளை மேலும் மேலும் துவக்கிக் கொண்டே போய், ஜாதித் துவேஷத்தை வளர்ப்பதற்குப் பதிலாக, எல்லாப் பள்ளிக்கூடங்களையும் சர்க்காரே எடுத்து நடத்த முன்வருவார்களா?

THE HON. SRI P. KAKKAN: அதைப் பற்றியும் அரசாங்கம் யோசித்தது. இப்பொழுது எந்த எந்த பள்ளிக்கூடங்கள் நடைபெற்று வருகின்றனவோ அவைகள் அப்படியே நடக்கும். ஆனால், புதிதாக நாம் ஹரிஜனங்களுக்காக தனியாகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதில்லை. எஜுகேஷன் டிபார்ட்மெண்டோ அல்லது இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பஞ்சாயத்து யூனியன்களோ நடத்த முடியாமல், வேறு வழியில்லாமல் இருந்தால், கலெக்டர் ஆலோசனையின் பேரில், துவங்கப்படும். ஆனால், புதிதாக இனிமேல் ஹரிஜனங்களுக்கென்று தனியாக பாடசாலைகள் வைப்பதில்லை என்பது கொள்கை.

Literacy

* 2050 Q.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Finance be pleased to state the percentage of literacy in the State in the year (i) 1946 and (ii) 1959?

13th November 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : The percentage of literacy for the intervening years between census years has not been worked out. The percentage of literacy for the Madras State according to the 1951 census, was 20.3 and according to the 1961 census provisional figures 30.2.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II—CALLING ATTENTION TO THE NEED FOR FAMINE RELIEF WORK IN COIMBATORE DISTRICT.

DEPUTY SPEAKER : The next item relates to calling attention under rule 41. The hon. Members, Sri N. K. Palanisami and Sri A. Senapathi Gounder are not in their seats. The hon. Member, Sri K. G. Palaniswamy Gounder can read the notice.

SRI K. G. PALANISWAMY GOUNDER : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, அசெம்பிளி விதிகள் 41-வது பிரிவின் கீழ் ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் ரெவன்யூ அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தாராபுரம், பல்லடம் தாலுகாக்களிலே வருடா வருடம் பருவ மழை தவறிக்கொண்டிருக்கிறது. இந்த வருடத்திலேயும் மழைக்குறைவினால் பல பகுதிகள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. 9-30 a.m.

DEPUTY SPEAKER : The hon. Member can read the notice and he need not make a speech.

SRI K. G. PALANISWAMY GOUNDER : பருவ மழை தவறியதன் காரணத்தால் தாராபுரம், பல்லடம் வட்டாரங்களில் பஞ்ச நிவாரண வேலையை மேற்கொள்ளுவது சம்பந்தமான ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் ரெவன்யூ அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, Palladam and Dharapuram taluks are known to be the distress pockets in the Coimbatore district. Even last year, distress conditions were reported and Government issued orders allotting sums of Rs. 2 lakhs and Re. 1 lakh respectively for execution of road and pond works in these taluks. Government also ordered the execution of the work of Parambikulam Main Canal in Dharapuram taluk. The Collector has since been permitted to draw upon the unutilised sum out of these 3 lakhs of rupees sanctioned last year during the current year 1961–62. Apart from this, another sum of Rs. 3 lakhs have been sanctioned during this year for deepening of drinking water wells in the district. Pond works which would ultimately increase the water level of adjacent irrigation wells have also been taken up under the Special Minor Irrigation Programme. As a substantial programme of permanent utility and of imme-